Crl.Misc/ 39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, VALANGAIMAN

Calendar Case No.**CC.30 /2018**
Miscellaneous
Preliminary Register
Deposition of Witness for PW - 1 (LW- 1 ) /

| Name | : | தினகராஜன் | Fathers Name | : | பன்னீர் |
|---|---|---|---|---|---|
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of JUNE 2023.

எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது) எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை,

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். எதிரி எனக்கு உறவினரா என்றால் தூரத்து சொந்தம். எதிரியிடம் நான் அவ்வப்போது எனது தேவைக்காக பணம் வாங்குவது உண்டு என்றால் சரிதான். அதேபோல் சம்பவத்தினத்தன்று எதிரி என்னிடம் அவர் கொடுத்த பணத்தை கேட்டார் என்றும் நான் அன்றைய தினம் இரவு சம்பவயிடத்திற்கு வரச்சொன்னேன் என்றால் சரிதான். எதிரி கொடுத்த பணம் ரூ.6000/- என்றும் நான் கொடுத்தது ரூ.5000/- என்றால் சரிதான்.

2. பாக்கித்தொகையை எதிரி என்னிடம் கேட்ட போது நான்தரமுடியாது என்று கூறி உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என்று அவரை மிரட்டினேன் என்றால் சரியல்ல. அதேபோல் சம்பவத்திற்கு முன்பு எதிரியிடம் நான் ரூ,50,000/- வாங்கியதாகவும் அதை எதிரி என்னிடம் கேட்டதனால் அதில் எங்கள் இருவருக்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது இரவு நேரம்என்றால் சரிதான். அப்போது அக்கம் பக்கத்தில் குடியிருப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான்.

3. சம்பவயிடத்தில் இருந்து பார்க்கும் தூரத்தில் வீடு இல்லை என்றால் சரியல்ல. 100 மீ தொலைவில் வீடுகள் இருந்தது. சம்பவத்தின் போது நான் எதிரியை தலையில் தாக்கியதன் காரணமாக அவருக்கு பலத்த இரத்த காயம் ஏற்பட்டு அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவர் என்மீது வலங்கைமான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்.34/2017 ன் கீழ் என் மீது 294(b), 324, 307 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

4. நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்த போது எனக்கு ஏற்பட்ட காயம் குறித்து மருத்துவரிடம் கூறினேன் என்றால் சரிதான். நான் எதிரி மீது கொடுத்த புகாரும் எதிரி என் மீது கொடுத்த புகாரும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் நடந்தது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். அ.சா.2 எனது உறவினர் என்றால் சரிதான்.

5. புகார் வாக்குமூலம் போலீசாரால் மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அ.சா.3 எனது மனைவி என்றால் சரிதான். சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த ஒரு சம்மந்தமும் இல்லை என்றும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக முன் விரோதம் இருந்த காரணத்தினால் நான் எதிரியை தாக்கினேன் என்றால் சரிதான்.